(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**STC.No.677-2020**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.8 (LW. 6 )

| | | |
|---|---|---|
| Name | : | கீர்த்திகா |
| Father's/Husband Name | : | கமலக்கண்ணன் |
| Village | : | சீத்தாராம்பாளையம் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | IT |
| Age | : | 31 |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 28.01.2025

**முதல் விசாரணை:–**

1) கடந்த 11.07.2019ம் தேதி மதியம் 2.30 மணிக்கு மேல் நானும், எனது அம்மா ராதாமணி, எனது 9 மாத குழந்தையுடன் இராசிபுரம் பஸ்நிலையத்திலிருந்து இராசிபுரம் – திருச்செங்கோடு செல்லும் சத்தியசிவா என்ற தனியார் பேருந்தில் சென்றோம். மேற்படி எங்களுக்கு பின்னால் விஜயலெட்சுமி என்ற தனியார் பேருந்து வந்தது. மேற்படி இரண்டு பேருந்துகளும் ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக்கொண்டு நேரம் காரணமாக முந்தி சென்றுகொண்டிருந்தார்கள். குமரமங்கலம் பஸ் நிறுத்தத்தில் நான் சென்ற சத்தியசிவா பேருந்து நின்று பயணிகளை இறக்கி கொண்டிருந்தபோது பேருந்திற்கு பின்னால் வந்த விஜயலட்சுமி பேருந்து நான் சென்ற பேருந்தில் மோதி விபத்து ஏற்படுத்திவிட்டது. அதில் எனக்கு கண்ணில்

அடிப்பட்டுவிட்டது. எனது அம்மாவுக்கு தலையிலும், எனது மகனுக்கும் உதட்டிலும், தலையிலும் அடிப்பட்டுவிட்டது. மேற்படி பேருந்தில் பயணம் செய்த சில நபர்களுக்கு காயம் ஏற்பட்டுவிட்டது. நான் பயணம் செய்த சத்தியா சிவா பேருந்தின் நடத்துனர் மற்றும் ஓட்டுநர் பார்த்தேன்.ஆனால் அவர்கள் இறங்கி ஓடிவிட்டார்கள். 108 ஆம்புலென்ஸ் மூலம் விவேகானந்தா மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று கொண்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் சென்ற பேருந்தானது ஒவ்வொரு பேருந்து நிறுத்தத்திலும் நிறுத்தி பயணிகளை இறக்கிகொண்டிருந்தது. அவ்வாறு பேருந்து நிற்கும் போது வலது புறம் மற்றொரு பேருந்து செல்வதற்கு இடம் உள்ளது என்றால் சரிதான். அந்தசமயத்தில் முகூர்த்தம் அதிகமாக இருந்ததால் பேருந்து மெதுவாகதான் பயணிகளை நிறுத்தி ஏற்றிக்கொண்டிருந்தது. நான், எனது அம்மா மற்றும் மகன் ஆகியோர்கள் பேருந்தின் நடுப்பகுதியில் அமர்ந்திருந்தோம் என்றால் சரிதான். பேருந்து செல்லும்போது மற்றொரு பேருந்து வலதுபுறம் செல்வதற்கு இடம் உள்ளது என்றால் சரிதான். நான் சென்ற பேருந்து எந்த சூழ்நிலையில் திடீரென பிரேக் போட்டு நிறுத்தினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆடு, மாடுகள் போன்றவற்றை ரோட்டில் சென்றுகொண்டிருந்ததையும் நான் பார்த்தேன். திடீரென பிரேக் போட்டதால் பின்னால் வந்த பேருந்து எந்த சூழ்நிலையில் முன்னால் நின்ற பேருந்தின் மீது மோதியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மற்றபடி வேறு எந்த விபரமும் எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை**:- இல்லை

A SURESH BABU Digitally signed by A SURESH BABU Date: 2025.01.28 06:34:06 +0530

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**STC.No.677-2020**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.9 (LW. 7)

| | | |
|---|---|---|
| Name | : | செந்தாமரை |
| Father's/Husband Name | : | தங்கவேலு |
| Village | : | அயித்தாங்குட்டை |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | கூலி |
| Age | : | 60 |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 28.01.2025

**முதல் விசாரணை:–**

1) கடந்த 11.07.2019ம் தேதி மதியம் 3.00 மணிக்கு மேல் நானும், எனது கணவர் தங்கவேலும் இராசிபுரம் – திருச்செங்கோடு செல்லும் சத்தியசிவா என்ற தனியார் பேருந்தில் எலச்சிபாளையம் பேருந்து நிறுத்தத்தில் ஏறினோம். மேற்படி எங்களுக்கு பின்னால் விஜயலெட்சுமி என்ற தனியார் பேருந்து வந்தது. மேற்படி இரண்டு பேருந்துகளும் ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக்கொண்டு நேரம் காரணமாக முந்தி சென்றுகொண்டிருந்தார்கள். குமரமங்கலம் பஸ் நிறுத்தத்தில் நான் சென்ற சத்தியசிவா பேருந்து நின்று பயணிகளை இறக்கி கொண்டிருந்தபோது பேருந்திற்கு பின்னால் வந்த விஜயலட்சுமி பேருந்து நான் சென்ற பேருந்தில் மோதி விபத்து ஏற்படுத்திவிட்டது. அதில் எனக்கு நெஞ்சில் அடிப்பட்டுவிட்டது. எனது கணவருக்கு காலில் அடிப்பட்டுவிட்டது. மேற்படி

பேருந்தில் பயணம் செய்த சில நபர்களுக்கு காயம் ஏற்பட்டுவிட்டது. நான் பயணம் செய்த சத்தியா சிவா பேருந்தின் நடத்துனர் மற்றும் ஓட்டுநர் பார்த்தேன். அவர்களை எனக்கு அடையாளம் தெரியும். 108 ஆம்புலென்ஸ் மூலம் விவேகானந்தா மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று கொண்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

பேருந்தில் நான் நடுபகுதியில் அமர்ந்திருந்தேன் என்றால் சரிதான். பேருந்து செல்லும்போது மற்றொரு பேருந்து வலதுபுறம் செல்வதற்கு இடம் உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. நான் சென்ற பேருந்து எந்த சூழ்நிலையில் திடீரென பிரேக் போட்டு நிறுத்தினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். திடீரென பிரேக் போட்டதால் பின்னால் வந்த பேருந்து எந்த சூழ்நிலையில் முன்னால் நின்ற பேருந்தின் மீது மோதியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலிசார் விசாரணையில் சொன்னேன். இரண்டு பேருந்தை எந்த பேருந்து ஓட்டுனர் ஓட்டினார் என்றும் எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை:-** இல்லை

A SURESH BABU

Digitally signed by A SURESH BABU
Date: 2025.01.28 06:33:57 +0530

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**STC.No.677-2020**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.10 (LW. 13)

| | | |
|---|---|---|
| Name | : | ஜீவானந்தம் |
| Father's/Husband Name | : | துரைசாமி |
| Village | : | திருச்செங்கோடு |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Occupation | : | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | : | 49 |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 28.01.2025

**முதல் விசாரணை:–**

நான் தற்போது அவினாசிப்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2018 ம் ஆண்டில் இருந்து 2021 ம் வருடம் வரை குமாரமங்கலம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். 11.07.2019 ம் தேதி கிராம நிர்வாக அலுவலகத்தில் பணியில் இருந்தபோது சாலையில் சத்தம் கேட்டது. நான் வந்து பார்த்தபோது SMR பேருந்து சத்தியசிவா பேருந்து மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. இதுசம்மந்தமாக போலிசார் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக நானும், உதவியாளர் செந்தில்குமாரும் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இரண்டு பேருந்துகளையும் போலிசார் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து காவல் நிலையத்திற்கு எடுத்து

சென்றார்கள். கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:-

சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தபோது வண்டி எந்த நிலையில் சாலையில் நின்றுகொண்டிருந்ததோ அதே நிலையில் தான் போலிசார் படம் வரைந்த சமயத்தில் நின்றுகொண்டிருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வட்டாட்சியருக்கு இதுசம்மந்தமாக ஒரு அறிக்கையை அனுப்பினேன். போலிசாருக்கு அந்த அறிக்கை கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். போலிசார் விசாரணையில் சொன்னேன். நான் இருக்கும் அலுவலகத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் 20 அடி இருக்கும். இரண்டு பேருந்துகளும் எந்த இடத்தில் நிறுத்தப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சைக்கிள் கடை முன்பு தான் நின்றுகொண்டிருந்தது. நான் சைக்கிள் கடை என்று கூறுவது மெக்கானிக் கடை ஆகும். இரண்டு பேருந்துகளும் ரோட்டின் இடது புறமாக மணி டீக்கடை, பாஸ்ட்புட் சென்டர் முன்பாக நின்றுகொண்டிருந்தது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட பார்வை மகஜரில் கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையெழுத்து செய்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**:- இல்லை

A SURESH BABU

Digitally signed by A SURESH BABU
Date: 2025.01.28 06:33:49 +0530